**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032.
தொலைபேசி எண்: 044–22201337.
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 28/ந/2024
நாள்: 02.06.2025

திரு.S.கௌதமன்,
பொள்ளாச்சி – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பொள்ளாச்சி நகராட்சி, பொள்ளாச்சி – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதி நகர் D காலனி, P.R.கந்தசாமி தெரு, கதவு எண்.C.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கௌதமன் என்பவரின் 30.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2024 அன்று பெறப்பட்டு 28/ந/2024 என எண்ணிடப்பட்டு முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி, ஜோதி நகர் D காலனி, P.R.கந்தசாமி தெரு, கதவு எண்.C.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.S.கௌதமன் என்பவர் தனது 30.01.2024 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் ஜோதி நகர் ‘A’ காலனி 100 அடி சாலையில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பொள்ளாச்சி அவர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 07.12.2022ம் தேதியிட்ட கடிதம் மூலம் ரேசன் கடை கட்ட நிதி ஒதுக்கி கடிதம் கொடுத்தார்.

அந்த இடம் மனைப்பிரிவு அங்கீகாரத்தில் ‘திறவிடம்’ என்று இருப்பதால் 25.11.2022ல் மாவட்ட ஆட்சித்தலைவரிடம் நான் அந்த இடத்தை குறிப்பிட்டு திறவிடமாக உள்ளதால் சிறப்பு அனுமதி வழங்கக்கோரி கடிதம் வழங்கினேன். முதுநிலை மண்டல மேலாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், கோவை மண்டலம் அவர்களின் கடித

ந.க.எண்.1786/2020 C1 நாள் 04.01.2023ம் தேதியிட்ட கடிதம் ரேசன் கடை கட்டித்தரக்கோரி நகராட்சிக்கு வழங்கியுள்ளார்கள்.

பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.3198/2020/E1 நாள். 06.03.2023–ல் மாவட்ட ஆட்சித்தலைவருக்கு சிறப்பு முன் நுழைவு அனுமதி கோரி கருத்துரு சமர்ப்பித்துள்ளார். மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்வாக அனுமதி கடிதம் ந.க.எண்.4008/2022/ஆ2 நாள்.17.04.2023 மற்றும் 19.09.2023ம் நாளிட்ட கடிதம் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் கடிதம் நாள் 13.07.2023 ந.க.எண்.3198/2023/E1-ல் திருத்திய மதிப்பீடு செய்யப்பட்டு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3198/2023 E1 நாள் 31.10.2023 வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகராட்சித்தலைவர் அவர்கள் கடிதம் வழங்கி மேற்கண்ட இடம் OSR நிலம் என்பதால் கடை கட்டக்கூடாது என கடிதம் வழங்கியுள்ளார். பொள்ளாச்சி நகராட்சி ஆணையாளர் வேலை உத்திரவை நிறுத்தி அந்த கடை கட்டும் பணியை நிறுத்தி வைத்துள்ளார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் மேற்கண்ட கோப்பில் நன்கு ஆய்வு செய்து அந்த இடத்தையும் ஆய்வு செய்து மேற்கண்ட கடை கட்டுவதற்கு நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். நான்கு முறை ஒப்பந்தப்புள்ளி கோரி யாரும் எடுக்காததால் திருத்திய மதிப்பீடு செய்து மீண்டும் நிர்வாக அனுமதி வழங்கி இணையதளத்தின் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்தப்புள்ளி எடுத்து வேலை உத்திரவு வழங்கியுள்ளனர்.

நகராட்சி ஆணையாளர் திரு.சுப்பையா ஏதோ உள்நோக்கத்தோடும், எதிர்பார்ப்போடும், இந்தப்பணியை நிறுத்தியிருப்பதாக நான் கருதுகிறேன். மேற்கண்ட பணியை நிறுத்துவதற்கு உதவியாக நகராட்சி பொறியாளர் உமாதேவி, உதவி பொறியாளர் கணேஷ் சங்கர், மின் கண்காணிப்பாளர் கணேசன் ஆகியோர் உடந்தையாக செயல்படுகிறார்கள். இதை கண்காணிக்க வேண்டிய நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர் இதைப்பற்றி கண்டுகொண்டதாகவே தெரியவில்லை.

மக்கள் பயன்பாட்டிற்காக கட்டப்பட வேண்டிய ரேசன் கடையை கட்டாமல் தடுத்து நிறுத்திய மேற்கண்ட நகராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுத்து அந்த கட்டிடம் கட்ட ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 22.07.2024 நாளிட்ட கடிதத்தின் மூலம் பொள்ளாச்சி நகராட்சி ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது.

3. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது கடிதம் ந.க.எண்.5608/2024/இ1, நாள்.09.11.2024ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார் :-

“பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் உள்ள ஜோதி நகரில் பூங்கா பகுதியில் பொது விநியோக கடை அமைக்க கட்டிடம் அமைக்க பொள்ளாச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி 2022–23 திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு ரூ.7.00 இலட்சம் செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் 17.04.2023 தேதியிட்ட செயல்முறைகள் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கி உள்ளார்.

நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகளில் யாரும் கலந்து கொள்ளப்படாமலும், நிதி ஆண்டு முடிவுற்றதிலும் திருத்திய மதிப்பீடு ரூ.9.00 இலட்சம் தயார் செய்து, திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், நிர்வாக அனுமதி கோரி, கோவை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு 25.08.2023 அன்று கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது.

நகராட்சி ஆணையரால் சமர்ப்பிக்கப்பட்ட கருத்துருவினை ஏற்று கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து திருத்திய மதிப்பீட்டிற்கு கோவை மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.4008/2022/ஆ2, நாள் 19.09.2023–ன் வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பின்னர் 26.09.2023 அன்று கோரப்பட்ட குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் யாரும் கலந்து கொள்ளாத காரணத்தால் 18.10.2023 அன்று மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இரு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

வரப்பெற்றதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டது. வேலை உத்திரவை பெற்று கொண்ட ஒப்பந்ததாரர் பணியினை தொடங்கிய நிலையில் நகர்மன்றத்தலைவர் அவர்கள் தனது 02.01.2024ம் நாளிட்ட விண்ணப்பம் வாயிலாக அன்றைய ஆணையாளரிடம் பொது விநியோக கடை அமைய உள்ள இடம் OSR வகைப்பாடு நிலப்பகுதி எனவும், அவ்விடத்தில் ரேசன் கடை அமைக்க அனுமதி வழங்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்ததின் பேரில், நில வகைப்பாடு குறித்து விளக்கம் பெறவும், வேறு இடம் ஒதுக்கீடு செய்து தரக்கோரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளதால் பணியினை நிறுத்தி வைக்கப்பட்டதுடன், இவ்வலுவலக கடித ந.க.எண்.3198/2022/இ1, நாள் 30.01.2024ன் வாயிலாக OSR வகைப்பாடு நிலப்பகுதி அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தில் 600 சதுர அடி காலி இடத்தை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக்கோரி படிவம்–24 பூர்த்தி செய்யப்பட்டு 24.02.2024 அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

சுமார் 6 மாத காலங்கள் சென்ற நிலையிலும், கோரப்பட்ட காலியிடம் ஆணையாளர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய கால தாமதம் ஏற்படுவதை, கருத்தில் கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்/தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை/கோயம்புத்தூர் அவர்களின் செயல்முறைகள் வாயிலாக இப்பணிக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியை ரத்து செய்து உத்தரவிட்டுள்ளார். இருப்பினும் மாற்று இடம் பெற்று அவ்விடத்தில் பொது விநியோக

கடை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரையும் மற்றும் எதிர்மனுதாரரான பொள்ளாச்சி நகராட்சி ஆணையரையும் 23.01.2025 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு ஆஜராகுமாறு 09.01.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு.S.கௌதமன் 23.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

"எனது புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் OSR (Open Space Reservation) ஆக இருந்தாலும் பொதுமக்கள் நலன் கருதி வேறு இடம் இல்லாமல் இருப்பதாலும், ஒரு ஏக்கர் OSR நிலத்தில் 600 சதுர அடி இடம் வழங்கி நியாயவிலைக் கடை கட்டித்தர வேண்டும் எனவும், ஏற்கனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன் நுழைவு அனுமதி வழங்கி உள்ளதால் கடை கட்டுவதை தடுத்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்.

பார்க் அன்ட் பிளே பில்ட் சட்டம் 1959–ல் 20ல் ஒரு பங்கு கட்டிடம் கட்டலாம் என உள்ளதை கருத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

மேற்படி எனது வார்டில் உள்ள OSR இடத்தில் நகராட்சியின் உரக்கிடங்கு செயல்பட்டு வருகிறது. இங்கே கட்டிடம் கட்டும்போது பொதுமக்கள் நலன் கருதி 600 சதுர அடி ரேசன் கடைக்கான கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

பயன்படாமல் கிடக்கும் OSR நிலத்தில் 600 சதுர அடி கட்டிடம் கட்டுவதனால் எந்த தவறும் ஏற்படாது என தெரிவித்துக்கொள்கிறேன். இவைகளை கருத்தில் கொண்டு நியாயவிலைக்கடை கட்டிடம் கட்ட உத்தரவு பிறப்பிக்க வேண்டுமாயும், தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இம்முறைமன்ற நடுவத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் 23.01.2025 அன்று விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்:–

பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35–ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் 2022–23ன் கீழ் பொது விநியோக கடை கட்ட கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் 19.09.2023ம் நாளில் திருத்திய நிர்வாக அனுமதி அளித்திருந்தார்.

மேற்படி கடை கட்ட உத்தேசிக்கப்பட்ட இடம் OSR (Open Space Reservation) இடம் என்பதால் விதி மீறல் உள்ளதாக நகர்மன்ற தலைவர் அளித்த புகாரின் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளாமல் நிறுத்தப்பட்டது.

மேற்படி இடத்திற்கு அருகில் 600 சதுர அடி புறம்போக்கு நிலத்தை நகராட்சி ஆணையாளர் பெயருக்கு மாற்றம் செய்ய படிவம் 24 பூர்த்தி செய்து 24.02.2024 அன்று வருவாய்த்துறைக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர்அவர்களின் செயல் முறை ஆணை நாள் 08.10.2024ன்படி இப்பணிக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதி இரத்து செய்யப்பட்டுள்ளது. பொதுவாக நகராட்சி பகுதிகளில் OSR இடம் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். எக்காரணம் கொண்டும் வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது என பல்வேறு வழக்குகளில் மாண்பமை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும், தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகள், 2019 மற்றும் தமிழ்நாடு ஊரமைப்பு திட்ட சட்டம் 1971, தமிழ்நாடு பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் திறந்தவெளிகள் (பாதுகாப்பு மற்றும் ஒழுங்குமுறை) சட்டம், 1959 ஆகியவற்றை மேற்கோள்காட்டி தீர்ப்பளித்துள்ளது.

மேலும், உள்ளாட்சிக்கு சொந்தமான நிலங்களை மன்ற அனுமதியுடன் அரசுக்கு பரிந்துரை செய்து அரசு அனுமதி பெற்றே மற்ற துறைகளுக்கு வழங்க இயலும் என தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் சமர்ப்பிக்கிறேன்” எனத்தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம், பொள்ளாச்சி நகராட்சி ஆணையரின் அறிக்கை, நகராட்சி ஆணையரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

மனுதாரர் திரு.S.கௌதமன் என்பவர் தனது புகார் மனுவில் பொள்ளாச்சி நகராட்சி வார்டு எண்.35ல் ஜோதி நகர் 'A' காலனி 100 அடி சாலையில் OSR இடத்தில் சட்ட மன்ற உறுப்பினர் நிதியிலிருந்து ரேசன் கடை அமைக்க அனுமதி வழங்கி உள்ளதாகவும், மாவட்ட ஆட்சியர் அவர்கள் அவ்விடத்தை ஆய்வு செய்து ரேசன் கடை கட்டுவதற்கு அனுமதி அளித்த நிலையில், நகராட்சி ஆணையர் ரேசன்கடை கட்டும் பணியை நிறுத்தியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள OSR இடத்தில் ரேசன் கடை அமைக்க பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி 2022–23 திட்டத்தின் கீழ் ரூ.7.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சி தலைவரின் நிர்வாக அனுமதியும் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதாகவும், ஒப்பந்தப்புள்ளியில் யாரும் கலந்து கொள்ளவில்லை என நகராட்சி ஆணையரின் அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது. மேலும் நிதி ஆண்டு முடிவுற்றதால் ரூ.9.00 இலட்சம் திருத்திய மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர்/மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் நிர்வாக அனுமதியும் பெறப்பட்டதாகவும், 18.10.2023 அன்று மீண்டும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணி தொடங்கிய நிலையில், நகர்மன்றத் தலைவர் அவர்கள் OSR வகைப்பாடு நிலப்பகுதி என்பதால், ரேசன் கடை அமைக்க அனுமதி அளித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும், வேறு இடம் ஒதுக்கி தர மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு தெரியப்படுத்திட கேட்டுக்கொண்டதை தொடர்ந்து OSR வகைப்பாடு நிலப்பகுதி அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தில் 600 சதுர

அடி காலி இடத்தை நகராட்சி ஆணையரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்து தரக் கோரியுள்ளதையும் நகராட்சி ஆணைரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிகிறது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/TP2 நாள் 09.11.2023ல் கீழ்க்கண்டவாறு அனைத்து நகராட்சி ஆணையர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

"பூங்கா உள்ளிட்ட பொது ஒதுக்கீடுகள் பசுமையான சுற்றுச்சூழல் அழகு மற்றும் பொழுது போக்கு அம்சம் கொண்டது மட்டுமல்ல. ஒரு குடியிருப்புப்பகுதி அபிவிருத்தி அடையும்போது தூய்மையான நல்ல காற்றோட்ட வசதி, நல்ல சூரிய ஒளி மற்றும் நீர் சுழற்சி ஆகியவற்றை அப்பகுதியில் குடியிருக்கும் அனைவருக்கும் கிடைப்பதை உறுதி செய்வதோடு சுகாதார சீர்கேட்டினை தடுக்கும் பகுதியாகவும் அமைகிறது. எனவே, பொது ஒதுக்கீடு உபயோகம் என்பது "வசதி" (mere amenity) என்பதை விட அத்தியாவசிய தேவை என்பதே பொருத்தமாகும். எனவே, பொது ஒதுக்கீடு (Reservation site) என்பது அப்பகுதியில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்துடன் (Quality life) தொடர்புடைய ஒன்றாகும்.

இதன் அடிப்படையிலேயே, தமிழ்நாடு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971 மற்றும் அதன் விதிகளின்படி நில உபயோகத்திட்டங்களோ அல்லது மனைப்பிரிவோ அனுமதிக்கும்போது, பொது ஒதுக்கீடுகளுக்கான இடங்களை உறுதி செய்தே அனுமதி அளிக்கப்படுகிறது. இவ்வாறு அனுமதிக்கப்படும் பொது ஒதுக்கீடு இடங்களை மாற்று உபயோகங்களுக்கு உட்படுத்துவது (change of use) மற்றும் பொது ஒதுக்கீட்டிலிருந்து விலக்குதல் (De-reservation) ஆகியவற்றை தடை செய்து பல்வேறு வழக்குகளில் உயர்நீதிமன்ற மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்பமை உச்சநீதிமன்றத்தின் நீதிப்பேராணை CIVIL APPEAL No.1890-91 of 2010 WITH CIVIL APPEAL No.7334 of 2013. CIVIL APPEAL No.7847 – 7848 of 2013. WRIT PETITION (CIVIL) No.591 of 2015 கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இப்பேராணையில்

". . . . . The areas covered by the OSR cannot be diverted for any other purpose. The respondents are duty bound to ensure that the area set apart as OSR is stringently utilized only for the purpose in the Rule/Regulation. We direct that no area meant for OSR shall be utilized as dumping yards or any other purpose other than as OSR " என உத்தரவிட்டுள்ளது.

பொது ஒதுக்கீடுகளில் கட்டுமானங்கள் தடை செய்யப்பட வேண்டும். அவ்வாறு ஏதேனும் கட்டுமானங்கள் இருப்பின் அவற்றை இடித்து அப்புறப்படுத்தி, அனுமதிக்கப்பட்ட பொது உபயோகத்தில், அவ்விடமானது நிலை நிறுத்தப்பட வேண்டும். மேலும் பொது ஒதுக்கீடு இடங்களை முறையாக பராமரிக்க கேட்டுக்கொள்வதோடு அவற்றை குறிப்பிடப்பட்ட நோக்கத்திலிருந்து எவ்வகையிலும் மாறுதல் செய்யும் முன்மொழிவுகளை

அனுப்புவதை முழுமையாக தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. தவறும் பட்சத்தில் சம்மந்தப்படடவர்கள் மீது நிர்வாக ரீதியான கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/TP2, நாள்.09.11.2023–ல் பொது ஒதுக்கீடு இடங்களை முறையாக பராமரிக்க வேண்டும் எனவும், அவற்றை குறிப்பிடப்பட்ட நோக்கத்திலிருந்து எவ்வகையிலும் மாறுதல் செய்யக்கூடாது எனவும் தெரிவித்துள்ள நிலையில், பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் தனது வாக்குமூலத்தில், நகராட்சி பகுதிகளில் OSR இடம் எந்த நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோ அந்த நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும், எக்காரணம் கொண்டும் வணிக பயன்பாட்டிற்கு பயன்படுத்தக்கூடாது என பல்வேறு வழக்குகளில் மாண்பமை உயர்நீதிமன்றமும், உச்சநீதிமன்றமும், உள்ளாட்சிக்கு சொந்தமான நிலங்களை மன்ற அனுமதியுடன் அரசுக்கு பரிந்துரை செய்து அரசு அனுமதி பெற்ற பிறகே மற்ற துறைகளுக்கு வழங்க இயலும் என தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளதை ஏற்று இவ்வழக்கில் மேல்நடவடிக்கை ஏதும் தேவையில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, ஜுன் 02–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.S.கௌதமன்,
   C–21, P.R. கந்தசாமி தெரு,
   ஜோதி நகர் 'D' காலனி,
   பொள்ளாச்சி – 642 001.
2. நகராட்சி ஆணையர்,
   பொள்ளாச்சி நகராட்சி,
   பொள்ளாச்சி – 642001.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   எம்.ஆர்.சி. நகர், சென்னை – 600 028.
4. இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி.நகர்,சென்னை – 600 028.

நகல்:

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்